1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேர்தல் எப்பொழுது வரும் என்பது பரபரப்பான செய்தியாக இருக்கிறதேயொழிய தெளிவான செய்தியாகச் சொல்ல முடியவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் சொல்வதைப் போல் தேர்தல் கமிஷன் குறிப்புகளும், அரசுக்கு வருகின்ற குறிப்புகளும் தேர்தல் வரும் என்று எச்சரிக்கையாகத்தான் அமைகின்றன. அந்த அடிப்படையிலே பஞ்சாயத்து, நிர்வாகம் ஆகிய அமைப்புகளைப் பிரிக்கக் கூடாது என்ற முடிவை அரசாங்கம் எடுத்தது. தேர்தலை ஒத்திப் போட்டுக் கொண்டு போகிற நிலை ஏற்படுமானால் மறுபரிசிலனை செய்வது நியாயம் என்றுதான் கருதுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நெல்லை மாவட்டத்தைப் பிரிப்பதற்கு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லையென்று சொன்னார்கள். ஆகவே, அம்மாவட்டத்தைப் பிரிக்கின்ற குறிப்பு (புராப்போசல்ஸ்) அரசாங்கத்திடம் இருக்கிறதா? அப்படி இருக்கிறதென்றால், எந்தெந்த வட்டங்களையெல்லாம் சேர்த்து புதிய மாவட்டம் அமைக்கப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பற்றித்தான் சொன்னேன். நெல்லை மாவட்டம் என்று நெல்லை மட்டுமல்ல, எந்தெந்த பகுதி என்று இப்போதே ஆரம்பிப்பது அதுவே ஒரு பெரிய போராட்டமாக அமைந்து விடும்.

மேட்டுப்பாளையம் தொகுதியில் வீடுகட்டும் திட்டங்கள்

*194 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் வீடு கட்டித்தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.